# 1. திருவருளடிமைப் பிரார்த்தனை.



*பண் - நட்டபாடை.*

**பொ**ய்யாமுகத் தின்வாழ்விற் புகாதுன்னடி யாருய்
மெய்யாமுகத் தினுக்கேவர மிகுமாவலிங் குள்ளேன்
ஐயாரடிக் கமலந்தொழ லானேனரு ளின்றி
உய்யேனினி யுய்யேன்மயி லூரும்பெரு மானே. 1

**த**ண்மாத்தட வாராணசி தனிற்போமுயிர் களுக்கன்
றொண்மாமறை மூலஞ்சொலி யுருவார்கதி நல்கும்
கண்மூன்றுடை யாற்கன்புள கறையில்குரு வான
கண்மாமணி யேயுன்னடி காணாமலுய் யேனே. 2

---

*10. (வ்யுத்தாநம்) **வ்யுத்தாநம்** - என்னும் வடசொல் "விதூனம்" என விகாரப்பட்டதெனல் வேண்டும். விரோதம் புரிதலுக்கு இது பெயராம். விரோதமில்லாத எனும் பொருள் பொருந்த விதூனரகித என மாறுக.*

***10. புயவமுதர்கள்** - தமிழ் நூன்முடிபு.*

**பா**லாழியன் சிவபூசனை பண்ணுந்திறற் காழி
சாலூரம தாய்நல்கிய சசிவேணியன் பொருளென்
றாலோலித முளமாமறை யறையுஞ்சிவ னருண்மேல்
மாலாகியு ளேனின்னருள் வாராமலுய் யேனே. 3

**மூ**ன்றாகிய பிணியாற்பசி முனிவாலின்மைப் பிணியால்
தோன்றாநின்ற வஞர்மேவிட றொழுமாதவர்க் குளதோ
ஈன்றாளுட னீன்றானென விலகுங்கிருபைக் கடலே
தேன்றோடவிழ் தண்ணார்கூச் சிரமாலிகை யோனே. 4

**ச**ங்காழியு ளாற்கன்றொரு தலைவேதனை யுஞ்சீர்
மங்காமறை யோற்கின்னல்செய் வயின்வேதனை யுந்தான்
தங்காதஞர் புரிந்தூர்ந்ததை யங்காண்டமுஞ் சாற்றும்
நுன்காலடி யார்க்காமய நுழையாதயி லோனே. 5

**த**வநீடுவி யாதன்சகோ தரர்சண்முனி களுமீன்
பவமாறியு னடியேகதி பதியேயெனு மந்நாள்
சிவமானதை யுறுமுன்னருள் சேரும்படி செய்தாய்
நவபேதமு ளான்முன்னிச நவிலும்பெரு மானே. 6

**நு**ன்காலடி தாழ்ந்தேத்திவ னுகர்சூர்தடி யாயேல்
எங்கேயினி யுய்வானுன திதமாமரு ளிதுவோ
கொங்கார்மலர் புனையுஞ்சுரர் கோமான்பணி கொண்ட
செங்காவிரி பாயும்பொழிற் சீகாழியன் மகனே. 7

**ஏ**ரார்பழ நிக்கேகவென் றெணுமென்றனை யிதுநாள்
வாராதிரு வாராயென வருள்வேமன்று வருவாய்
கூராய்விய சனமென்றன்று கூறிச்சென்ற வணமே
ஆராரரு ளென்றோவரு மயில்வேன்முரு கோனே. 8

**3.** ***சாலூரம்*** = *மேன்மை;* ***சூ – நிகண்டு*** *நோக்குக.*

**4.** *தேன்றோடவிழ் தண்ணார் கூச்சிரமாலிகையோனே = குளிர்ந்த மணமலர்க்கூட்டங்களென அலர்ந்துள்ள ஒரு கூச்சிரமாலையை யுடையானே. கூ=பூமி, சிரம் = வானமாகலின் விண்ணும் மண்ணுமே அவனுடைய பாரமேசுவரப் பேருருவில் மாலையென மிளிர்வன என்க.*

**க**ண்ணாலிருந் துந்தன்முகங் காணத்தகு மோகேழ்க்
கண்ணாடியி னாலேயது காணத்தகு மதுபோல்
தண்ணாருமுன் னருளாலுயிர் தனைநானறி யாதே
பண்ணாநிற்ப தொன்றும்மிலை பரனேகுரு பரனே. 9

**த**ன்னையறி வேனேற்கொளுன் றன்னையறி வேனின்
றென்னையறி யாதேயினிச் செயுமாறென நொடியாய்
மன்னேமயி லேறுங்குரு மணியேகிரி புகழ்ந்த
அன்னேயெனை யாளுந்திரு வருளேதிரு வருளே. 10

நந்தன வருடம் மாசி மாதம் 26ந்தேதி புதவாரம்.